**கன்னிவாடி வனச்சரக அலுவலர், வனச்சரக பணியாளர்கள் மற்றும் கே.சி.பட்டி கிராம நிர்வக அலுவலர் ஆகியோரின் கூட்டுப்புலத்தணிக்கை அறிக்கை**

**கிராமம்** : கே.சி.பட்டி

**பட்டா எண்** : 66 மற்றும் 976

**புலஎண்** : 386 மற்றும் 389

**நாள்** : 04.07.2024

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கே.சி.பட்டி வருவாய் கிராமத்தில் புலஎண்கள் : 386 மற்றும் 389 ஆகியவற்றிற்கு விவசாய விளைபொருட்கள், உரம் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கொண்டு செல்ல 145 மீ நீளம் 12 அடி அகலம் கொண்ட வனப்பகுதியை பாதையாக பயன்படுத்த திரு.ப.மகாலிங்கம், த/பெ.பழனிச்சாமி, குப்பம்மாள்பட்டி என்பவர் மனு செய்ததன் அடிப்படையில் மேற்கண்ட புலங்களுக்கு வேறு எந்த வகையிலும் பாதை உள்ளதா என்பது குறித்து அறிக்கை செய்யுமாறு கன்னிவாடி வனச்சரக அலுவலர் கடித நாள் : 28.05.2024 -ன்படி கே.சி.பட்டி கிராம நிர்வாக அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

அதன்படி, கே.சி.பட்டி கிராம நிர்வாக அலுவலர் 15.06.2024 -ம் நாளைய கடிதத்தில் மனுதாரரால் பாதை அனுமதி கோரப்பட்ட புலஎண் : 389-ற்கு தற்சமயம் புலஎண்: 391/4, 391/5 தேசிய நெடுஞ்சாலையிலிருந்து, புலஎண்கள்: 391/2-ன் கிழக்கு எல்லை, புலஎண் : 390/1-ன் கிழக்கு எல்லை மற்றும் வடக்கு எல்லை வழியாக 12 அடி அகலப்பாதையானது அமைக்கப்பட்டுள்ளது என்றும், இப்பாதையினை 386 மற்றும் 389 புல எண்களுக்கு உரிமையாளராகிய திரு.ப.மகாலிங்கம் (மனுதாரர்) த/பெ.பழனிச்சாமி என்பவர் சத்திரப்பட்டி சார் பதிவக ஆவண எண் : 1455/2021 நாள் : 20.09.2021 -ன் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றும், இப்பாதையினை புலஎண் : 388 மற்றும் 389-க்கு மட்டுமே சென்று வர இயலும். மேலும் புலஎண்:389-ல் பெரிய பாறை அமைந்துள்ளதால், இப்பாதையினை புலஎண் : 386 -க்கு பயன்படுத்த இயலாது என்றும், புலஎண் : 386-க்கு சென்று வர இதர அரசுபுறம்போக்கு பாதை வசதி ஏதுமில்லை என்றும் அறிக்கை பெறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 04.07.2024 ம் தேதியில் கன்னிவாடி வனச்சரக அலுவலர், வனவர், வனக்காப்பாளர் மற்றும் கே.சி.பட்டி கிராம நிர்வாக அலுவலர், தலையாரி மற்றும் மனுதாரர் ஆகியோர் அடங்கிய குழுவினர்களுடன் மேற்கண்ட புலங்களை ஆய்வு செய்ததில், புலஎண் : 389 -ற்கு சென்றுவர மனுதாரரால் கிரையம் பெறப்பட்ட பாதை உள்ளது எனவும், புலஎண் : 389-ல் பெரிய பாறை ஒன்று அமைந்துள்ளதால், அப்புலத்தின் வழியாக புலஎண் : 386-ற்கு விவசாய பொருட்களை ஏற்றும் பொருட்டு, வாகனங்கள் சென்றுவர இயலாத சூழ்நிலை உள்ளது எனவும், கூட்டுப்புலத்தணிக்கையில் உறுதி செய்யப்பட்டது.

எனவே மனுதாரராகிய திரு.ப.மகாலிங்கம் என்பவர் மனுவில் கேட்டுக்கொண்டபடி, புலஎண் : 389-ற்கு ஏற்கனவே பாதை உள்ளதால், அதற்கு பாதை வழங்க இயலாது எனவும், புலஎண் : 386-ற்கு விவசாய பயன்பாட்டிற்காக வாகனங்கள் சென்றுவர எந்தஒரு வகையிலும் பாதை இல்லதததால், திரு.ப.மகாலிங்கம், த/பெ.பழனிச்சாமி என்பவருக்கு பாதை உரிமம் வழங்க பரிந்துரை செய்யலாம் என கூட்டுப்புலத்தணிக்கையில் முடிவு செய்யப்பட்டது.

04/07/2024
கிராம நிர்வாக அலுவலர்
12. கே.சி. பட்டி
கொடைக்கானல் வட்டம்

4/7/2024
FOREST RANGE OFFICER
KANNIVADI RANGE,
KANNIVADI.

4/7/2024

04/07/2024
Forester,
Sempatti Section.
Sempatti.

04/07/2024
வனக்காப்பாளர்


# ஸ்தல வரைபடம்

= பாதை கோரும் பட்டா நிலங்கள்

: பாறை அமைந்துள்ள பட்டா நிலம்

= பாறை

: கிராமம் செல்லும் பாதை




இந்த ஸ்தல வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டது.

கோ. மணிராஜ்,
வனக்காப்பாளர்,
பெரியூர் பீட்.

FOREST RANGE OFFICER
KANNIVADI RANGE,
KANNIVADI.

Forester,
Sempatti Section,
Sempatti.